# அன்பே என்றானவா

அன்பே என்றானவா
என் எண்ண நிறைவானவா
உன் மேன்மை வானம் என்றாகினாலும்
என் ஏழ்மைக் குறைதீர்த்தவா - 2

**1**
வளம் காய்ந்து நிழல் தேடும் நேரங்களில்
வளமோடு எனைச் சூழும் நதியாகின்றாய்
பிரிந்தோடி மனமாடும் வேளைகளில்
எனைத் தேற்றும் புது வாழ்வு மழையாகின்றாய்
மலை போன்ற உன் அன்பு முன்னாலே நான்- 2
என் தாழ்வை உன் மாண்பை
நான் காண்கின்றேன் (2)

**2**
உன் பாத நிழல் போதும் என ஏங்கினேன்
உன் நெஞ்ச மலராலே எனை மூடினாய்
கண் பார்வை அருள் போதும் என நாடினேன்
என் பாதை வழி செல்லும் துணையாகினாய்
மண்மீது கால் ஊன்றும் தொடு வானமாய்-2
என் மீது நீ வந்து நானாகின்றேன் - 2